www.ecourtsindia.com



# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ம் நாள் சாட்சியாகிய பார்த்திபன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி.சரஸ்வதி இளநிலை உதவியாளர், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பார்த்திபன் | வயது | 54 |
| த/பெ | கிருஷ்ணன் | இனம் | ஆண் |
| கிராமம் | காஞ்சிபுரம் | தொழில் | தனியார் நிறுவன வேலை |
| சமயம் | | தாலுக்கா | |

**CC.No.188/2019**

**<u>மனுவின் பேரில் அழைத்து 1 முதல் 7, 9 முதல் 16 எதிரிகள் தரப்பில் விசாரணை</u>**
**<u>23.01.2023 அ.சா.1</u>**

1. நான் தற்போது எந்த நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் என்றால் எஸ்என்ஓய் நிறுவனத்தில் தான் வேலை செய்து வருகிறேன். அந்த தொழிற்சாலையில் ஒன்றுபட்ட தொழிலாளிகள் கூட்டமைப்பில் எதிரிகள் உறுப்பினர்கள் என்றால் சரிதான். 04.09.2018 தேதியில் இருந்து அந்த கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள் என்றால் சரிதான். 4.9.2018 தேதிக்கு பிறகு எதிரிகள் அந்த நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். கம்பெனிக்குள் வரவில்லை என்றால் சரிதான்.

2. எங்களது கம்பெனியில் சம்பவ தேதியில் எத்தனை நபர்கள் வேலை செய்தார்கள் என்றால் சுமார் 100 நபர்கள் வேலை செய்தார்கள். தொழிற்சங்கத்தில் எத்தனை நபர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் 58 நபர்கள் இருந்தார்கள். எத்தனை நபர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்றால் 58 நபர்கள் செய்தார்கள்.

3. மீதி தொழிலாளிகள் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தார்களா என்றால் ஆமாம். 2வது சிப்டில் எத்தனை நபர்கள் வேலை செய்தார்கள் என்றால் 2வது சிப்டில் யாரும் வேலை செய்யவில்லை. பயிற்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் மட்டும்தான் இருந்தோம். சுமார் 10 லிருந்து 15 நபர்கள் இருந்தோம்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-4.pdf

4. 2வது சிப்டில் 70 நபர்களுக்கு மேல் வேலை செய்தார்கள் என்றால் இல்லை. எந்த எந்த சிப்டில் யார் யார் வேலை செய்கிறார்கள் என்று பதிவேடு பராமரித்து வருவோம் என்றால் சரிதான். தொழிலாளர்கள் வேலைக்கு உள்ளே சென்று வெளியே வரும்போது செக்யூரிட்டி செக் செய்துதான் அனுப்புவார்கள் என்றால் சரிதான். சம்பவ தேதியில் செக்யூரிட்டிசெக் செய்யவில்லை. செக்யூரிட்டி சம்பவ தினத்தில் செக் செய்யவில்லை என்று முதல் விசாரணை மற்றும் புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் செக்யூரிட்டிகளை போலீசார் விசாரணை செய்தபோது தெரிவித்துள்ளார்கள்.

5. நான் எத்தனை வருடமாக அந்த நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் என்றால் 2018 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து வேலை செய்து வருகிறேன். ஸ்கிராப் பொருட்களை எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை அப்புறப்படுத்துவோம் என்றால் அதன் அளவை பொறுத்து 10 நாட்கள் அல்லது 20 நாட்களுக்கு ஒரு முறை அப்புறப்படுத்துவோம். சிசிடிவி பதிவுகளை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். 20.11.2018ம் தேதிக்கான சிசிடிவி பதிவை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

6. சிசிடிவி டிஸ்பிலே யாருடைய அறையில் உள்ளது என்றால் இயக்குநர் கோடீஸ்வரி அறையில் உள்ளது. 04.9.2018ம் தேதி இயக்குநர் எத்தனை மணிக்கு வேலைக்கு வந்தார் என்றால் முதல் சிப்டில் வந்தார். முதல் சிப்ட் எத்தனை மணி என்றால் காலை 08.30 மணி. இயக்குநர் அவரது அறைக்கு சென்றவுடன் சிசிடிவி வேலை செய்கிறதா என்று கண்டறிய முடியும் என்றால் சரிதான். 4.9.2018ம் தேதி 8ம் எதிரி சிசிடிவியை ஆப் செய்திருந்தால் இயக்குநருக்கு தெரிந்திருக்கும் என்றால் இயக்குநர் என்னிடம் சிசிடிவி வேலை செய்யவில்லை என்று தெரிவித்தார். நான் மெயின்டனன்ஸ் பிரிவிற்கு தகவல் கொடுத்தேன். நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. எனக்கும், தொழிற்சங்கத்தில் உள்ளவர்களுக்கும் சுமூகமான உறவுமுறை உள்ளதா என்றால் உள்ளது. நான் தொழிற்சங்கத்திற்கு விரோதமாக செயல்பட்டு வந்தேன் என்றால் இல்லை. அதனால்தான் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. எதிரிகள், சாட்சி வெங்கடேசனை திட்டியதாக தெரிவித்துள்ளதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

8. புகாரில் உண்மை தன்மை இல்லை என்றாலும், தொழிற்சங்கத்தின் மீதான

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-4.pdf

www.ecourtsindia.com

காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மை. எதிரிகளை வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்றால் இல்லை.

மறு விசாரணை ;இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Sd/-K.Ramkumar,
Judicial Magistrate,
Sriperumbudur.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-4.pdf

www.ecourtsindia.com